**கவனிக்க.-** *2023.02.17 ஆந் திகதிய 2320 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2321 - 2023 පෙබරවාරි මස 24 වැනි සිකුරාදා - 2023.02.24

*2321 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *278* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *283* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, மாச்சு மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மாச்சு மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

275-B 82431-5,413 (2023/02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – முல்லைத்தீவு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயத வருடங்கள் 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது வருடங்கள் 55 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது வருடங்கள் 70 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்திப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, மாச்சு மாதம் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, சனவரி 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | கரைதுறைபற்று | கரைதுறைபற்று பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு |

*02-291*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது)
பதிவாளர் பதவி – கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, மாச்சு மாதம் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, சனவரி 31.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | கொழும்பு | மருதானை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | கொழும்பு | கொழும்பு பகுதியின் (புனித செபஸ்தியன் பிளேஸ்) விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | கொழும்பு | கொழும்பு பகுதி கொச்சிக்கடை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | கொழும்பு | புதுக்கடை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொழும்பு பகுதி தெமடகொடை பிரிவின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொழும்பு பகுதி வெள்ளவத்தை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | கெஸ்பேவ | பொரலஸ்கமுவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கொழும்பு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | மொரட்டுவை | சல்பிட்டி கோறளை (கொரலவெல்ல) பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | மொரட்டுவை | சல்பிட்டி கோறளை (மொரட்டு முல்லை) பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கொழும்பு | பாதுக்க | பாதுக்க பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹேவகம் கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |

*02-292*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

*பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியினை நீடித்தல் – தென் மாகாணம்*

*இலக்கம் 2308 மற்றும் 2022.11.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக மேலதிக விவாகம் மற்றும் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி வெற்றிடங்களுக்குரிய விண்ணப்பங்களினை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியினை 2023.05.05 ஆந் திகதி வரை நீடிப்பதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

*2. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி மாத்திரம் திருத்தப்படல் வேண்டும் என்பதுடன் அந்த விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்வாறே அதிகாரம் செலுத்தப்படுவதாக தயவுடன் கருத்திற் கொள்ளவும்.*

ஏ. எம். ஆர். எஸ். கே. அமரகோன்,
பதிவாளர் நாயகம். (பதில்)

*பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.*

*02-313*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

*சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – அம்பாறை மாவட்டம்*

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.*

*2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.*

*3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)*

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, பங்குனி மாதம் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ஏ. எம். ஆர். எஸ். கே. அமரகோன்,
பதிவாளர் நாயகம். (பதில்)

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2023, பெப்புருவரி 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | பதியதலாவ | அம்பாறை மாவட்டத்தின் பதியதலாவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பின்தென்ன பற்று தெற்கு பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை. |

02-314

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவிப் பணிப்பாளர் (விலையிடல்) தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2023)

இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவிப் பணிப்பாளர் (விலையிடல்) தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற திணைக்கள உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவிப் பணிப்பாளர் (விலையிடல்) தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பானது இப்பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இப்பரீட்சையானது 2023, யூன் மாதத்தில் கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சையினை தாமதப்படுத்துவதும் அல்லது இடை நிறுத்துவது பற்றிய தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுவினால் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**எழுத்துப் பரீட்சை.**- இப்பரீட்சையானது பின்வரும் மூன்று (3) வினாத் தாள்களைக் கொண்டிருக்கும்.

(1) நுண்ணறிவுப் பரீட்சை
(2) மொழித்திறன்
(3) விலையிடல் மற்றும் புள்ளிவிபரவியல்

02. **கவனிக்கப்பட வேண்டியது** : அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் இல. PSC/EST/04-03/03/2017 மற்றும் 2019.09.03 ஆந் திகதி அனுமதியின் கீழ் உதவிப் பணிப்பாளர் (விலையிடல்) பதவிக்கு தகுதியினை கொண்ட ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இருப்பாரேயானால் அவ் உத்தியோகத்தருக்கு எழுத்துப் பரீட்சை இடம்பெறாததுடன் ஒன்றுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் இருப்பார்களேயானால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எழுத்துப் பரீட்சை இடம்பெறும்.

03. நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 01 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும்.

04. **சேவை நிபந்தனைகள்.**-

4.1 அரசாங்க சேவையில் உள்ள நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கு உட்படும். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2017.01.26 ஆந் திகதி PSC/EST/04-01-43/05/2016 ஆம் இலக்க அனுமதியின் கீழ் இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவை பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் அல்லது இதன் அடுத்துப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள், தாபன விதிக் கோவையின் நிதிப் பிரமாணங்கள், 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி ஒருவர் உதவிப் பணிப்பாளர் (விலையிடல்) தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

4.3 நியமனமானது ஒரு வருட வேலை பார்க்கும் காலப்பகுதி ஒன்றுக்கு உட்பட்டதாகும். இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட சேவைகளில் உதவிப் பணிப்பாளர் (விலையிடல்) தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பானது செய்த திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையானது சித்தியெய்தப்படல் வேண்டும்.

4.4 2020.10.16 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 18/ 2020 இல் காணப்படும் விதிமுறைகளுக்கமைய இணைந்து கொள்ளும் சேவையில் அரசகரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

4.5 நியமிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற ஏதேனும் பரீட்சார்த்தியின் நியமனத்தினை இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

05. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 03/2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை I இன்படி இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 47,615 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895 (S.L.1-2016) ஆகும். இச்சம்பளம் குறித்த சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் சட்டதிட்டங்களின் படியே வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வேறு படிகளும் உங்களுக்கு உரித்தாகும்.

06. **ஆட்சேர்ப்பதற்கான தகுதி**.-

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(iii) நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கான தேக ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(ஆ) **அனுபவ அறிவு**.-
(i) போக்குவரத்து விலையிடல் சேவையில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

**வேறு**.-
(i) விண்ணப்பம் கோரப்பட்ட தினத்திற்கு முன்பாக பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2020 ஆம் இலக்க விதி முறைகளுக்கமைய ஒழுக்காற்று நடவடிக்கையில் ஈடுபட்டிராது இருத்தல் வேண்டும்.

(ii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான மேற்கூறப்பட்ட அனைத்து தகுதிகளும் விண்ணப்பத்தில்/ வர்த்தமானப் பத்திரிகையில் காணப்படும் தினத்திற்கு முன்னர் அனைத்து விதத்திலும் பூரணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கிடையாது.

07. பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200 ஆகும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்கள ஆணையாளரின் வரவு இல. 20-03-02-13 அதனடிப்படையில் அரசாங்க வருமானத்திற்கு வரவாகுமாறு நாடெங்கும் உள்ள எந்தவொரு தபாலகம்/ உபதபாலகத்திற்கு பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிடவும். பரீட்சைக் கட்டணமாக ரசீது அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்திருப்பது நன்று.

08. **விண்ணப்பிக்கும் முறை**.-

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் அமைய வேண்டும் என்பதுடன் அது ஏ4 (A4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டியதுடன், 1.0 தொடக்கம் 2.12 வரையிலான கூடுகள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 3.0 தொடக்கம் 7.0 வரையிலான கூடுகள் அதன் மறு பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தமது விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இப்படிவங்கள் கணினி அல்லது தட்டச்சின் மூலம் தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும் என்பதை விசேடமாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தங்கள் கையெழுத்தில் தெளிவாக நிரப்பப்படல் வேண்டுவதோடு மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்புகள் ஏதுமின்றி நிராகரிக்கப்படுவதனால், விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பதனையும் மற்றும் அனைத்து தகவல்களையும் உட்செலுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பற்றுச்சீட்டின் நிற்படப் பிரதி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகளினால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியுடன் தாம் சேவையாற்றும் திணைக்கள தலைவரிடம் கையளிக்க வேண்டும். பிழையின்றி பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவங்கள் உப திணைக்கள தலைவரினூடாக பரிந்துரைக்கப்பட்டு நிழற் பிரதி தனி நபர் கோவையிலும் முதற் பிரதி கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு 2023.03.24 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (அத் தினத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்) "இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவிப் பணிப்பாளர் (விலையிடல்) தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2023)" என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

"பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு,
ஒழுங்கமைப்பு (திணைக்கள மற்றும் வெளிநாட்டுப் பரீட்சை) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. - 1503,
கொழும்பு"

(ஈ) பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போதான விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பினனர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(உ) ஒவ்வொரு அம்சமும் முழுமையில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரம் தபாலில் தொலைந்துவிட்டதாகவோ தாமதமானதாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஊ) வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதி பெற்றவர்களினால் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதா என்பதனை பரிசீலனை செய்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினை கொண்டிருக்கும் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அத்தினத்திற்கு முன்னதாக பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்திருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது என்பதனை பத்திரிகை விளம்பரத்தின் மூலம் மற்றும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வலைத்தளத்தில் வெளியிடப்படும். பத்திரிகை மூலமாக வெளியிடப்பட்டு அத்தினத்திலிருந்து ஓரிரு நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு கிடைக்கப்பெறாவிடின் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்படல் வேண்டும். பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்கும் போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை சரியாகக் குறிப்பிட வேண்டும். கொழும்பை தவிர்ந்த விண்ணப்பதாரியாயின் தகவல்களை பெக்ஸ் மூலம் அனுமதிப் பத்திரத்தை அனுப்புவதற்கு விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தை குறித்து கடிதத்துடன் பெக்ஸ் மூலமாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பது சிறந்ததாகும். மேலும் பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மை எனக்கொள்ள உங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் பிரதிகளை தயார்நிலையில் வைத்திருப்பது சிறந்தது.

09. **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை**.- விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை பெற்றுத்தர வேண்டும். இப்பரீடசையின் விதிமுறைக்கமைய யாதேனும் ஒரு விண்ணப்பதாரிக்கு தகுதியற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

10. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு செயலாளரினால் வரையறுக்கப்பட்டவாறு கையாளப்படல் வேண்டும்.

11. **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி ஊடகம்**.-

(அ) பரீடசை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

**குறிப்பு** : (1) விண்ணப்பதாரி ஒருவர் ஒரே மொழியில் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.
(2) விண்ணப்பப்படிவத்தில் சுட்டிக் காட்டப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

12. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்.**- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை சாரதி அடையாள அட்டை.

இவ்வாறான பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை நிரூபிக்கும் வகையில் முகம் மற்றும் இரு காதுகள் மூடப்படாதவாறு பரீட்சை நிலையத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு அன்றி பிரவேசிக்கும் பரீட்சார்த்தியை பரீட்சை நிலையத்திற்குள் அனுமதிக்க இயலாது. பரீட்சை ஆரம்பத்திலிருந்து முடியும் வரை பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை நிரூபிக்கும் வகையில் முகம் மற்றும் இரு காதுகள் மூடப்படாதவாறு பரீட்சை எழுதல் வேண்டும். அவ்வாறு இருக்க மடியாது என மறுத்தால் பரீட்சை எழுதப்படுவது தடை செய்யப்படாது. இருப்பினும் அவரது பெறுபேறு வெளியிடப்படமாட்டாது.

13. **ஆட்சேர்ப்பு முறை :**

13.1 **எழுத்துமூலப் பரீட்சை.**-

பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சைத் தாள்கள் மூன்றினை (03) உள்ளடக்கியிருக்கும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்த பட்சப் புள்ளிகள் என்பன பின்வருமாறு :

| பாடம் | புள்ளிகள் | குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள் |
|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 |
| 02. மொழித்திறன் | 100 | 40 |
| 03. விலையிடல் மற்றும் புள்ளிவிபரவியல் | 100 | 40 |

பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

13.2 **பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.**-

எழுத்துப் பரீட்சையில் பங்குபற்றி சித்திபெற்ற விண்ணப்பதாரிகளில் அதிகூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் இருக்கின்ற வெற்றிடங்களுக்கு சமனாக இரட்டிப்பு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்புவிடுக்கப்படுவர். எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சையில் முழுப்புள்ளிகளின் கூட்டுத்தொகை கொண்டு திறமைகளின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தி நேர்முகப்பரீட்சை இடம்பெறும்.

(ii) விண்ணப்பதாரி ஒருவர் மாத்திரமே காணப்படின் பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றினை மாத்திரம் நடாத்தி தகுதிகளை பரிசீலனை செய்து தகுதியானவர் என கருதப்படின் அவருக்கே இந்நியமனம் வழங்கப்படும்.

(iii) பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை அதிகாரிகள் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

14. **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்.**-

(1) **நுண்ணறிவுப் பரீட்சை.**- விண்ணப்பதாரி எண்கள், மொழிசார் மற்றும் உருவ வடிவங்கள், இடைத் தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்கரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிபுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவதற்கான வினாப்பத்திரம். (காலம் : 01 மணித்தியாலம்)

(2) **மொழித் திறன்.**- இலக்கணம், சுருக்கம், பொருள் விளக்கம், தெளிவான மொழி நடை மற்றும் மொழித் திறன் மூலம் பெற்றுக்கொண்ட அறிவினை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. கொடுக்கப்படும் வினாத் தாளிலேயே அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும். (காலம் : 02 மணித்தியாலங்கள்)

(3) **விலையிடல் மற்றும் புள்ளிவிபரவியல்.**- விலையிடல் மற்றும் முகாமைத்துவ கணக்குப் பதிவியல், தொழிலாளர் செலவுகள், பொருட்செலவுகள், பொதுச் செலவுகள், செலவுகளை ஒழுங்குபடுத்தும் முறைகள், தரநிலைகளின் அடிப்படையில் செலவுகள் மற்றும் வரவு செலவுகளை கட்டுப்படுத்தும் திறமை.

மற்றும்

முகாமைத்துவம், செலவியல் மற்றும் நிதிப் பகுப்பாய்வு தொடர்பான தரவு சேகரித்தல், பகுப்பாய்வு முன் அறிவிப்பு உள்ளடங்கலான தகவல்கள் பெற்றுக்கொடுப்பது தொடர்பான புள்ளிவிபரவியல் உபயோகம் தொடர்பான அறிவினை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. கொடுக்கப்படும் வினாத்தாளிலேயே அனைத்த வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும். (காலம் : 2 மணித்தியாலங்கள்)

15. பரீட்சை நடாத்தப்படுவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பான அனைத்து தீர்மானங்களும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானங்களுக்கு விண்ணப்பதாரி கட்டுப்படுவதுடன், அவ் விதிமுறைகளில் இருந்து மீற நேர்ந்தால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டி நேரிடும்.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இப்பிரசுரத்தில் மொழிகளுக்கிடையில் வேறுபாடு இருப்பின் அல்லது மூன்றுக்கும் இடையில் தொடர்பில்லா தன்மை காணப்படின் சிங்களத்தில் பிரசுரிக்கப்படும் கெசட் விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எம். எம். பி. கே. மாயாதுன்னெ,
செயலாளர்,
(போக்குவரத்து மற்றும்
நெடுஞ்சாலைகள் அமைச்சு.)

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,
7 ஆவது மாடி,
செத்சிறிபாய,
11 ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.
2023, பெப்புருவரி 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கை புகையிரத திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட சேவைகளில் உதவிப் பணிப்பாளர் (விலையிடல்) தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2022)**

1.0 பரீட்சை மொழி ஊடகம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி ஊடகத்தில் விண்ணப்பமானது நிரப்பப்படல் வேண்டும்.

2.0 தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :...........................................................

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :..............................

2.4 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்) :.............
........................................

2.5 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :..........................................

2.6 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.7 பால் - ஆண் - 0 ☐
பெண் - 1 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.8 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.9 தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2.10 விவாக நிலை : (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)
விவாகமாகாதவர் - 1 ☐
விவாகமானவர் - 2

2.11 இனம் : (சிங்களம் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையோர் - 5) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.12 பிறந்த திகதி
ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.0 ...................... ஆந் திகதியிலுள்ளவாறு சேவைக்கு/தரத்திற்கு உள்வருவதற்காக தரப்படுத்தல் பரீட்சை/நேர்முகப் பரீட்சையினைத் தாங்கள் சித்தியெய்திய மொழி ஊடகத்தினை குறிப்பிடவும் :.........................

4.0 (i) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6.0 இல் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா? :.. .............................

(அ) .................... ஆந் திகதியிலுள்ளவாறு வயது :----.

(ஆ)

(ii) தற்போது வகிக்கும் பதவி :-----.
(iii) தரம் :-----.
(iv) பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
(v) அப்பதவியில் நிரந்தரமான திகதி :-----.
(vi) சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவுத்திட்டம் :-----.
(vii) பரீட்சைக்கு தோற்றிய மொழி :-----.

(ii) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 06 இல் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவி ஒன்றின் சேவைகள்/தரங்களின் தகைமைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய .......................... ஆந் திகதியில் உள்ளவாறான முனைப்பானதும் திருப்திகரமானதுமான மொத்தச் சேவைக்காலம் :................................

5.0 பரீட்சார்த்தியின் சான்றுரை :
.................... ஆந் திகதிக்கு முன்வரும் மற்றும் வயது காலப் பகுதியில் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 06 (ஆ) இற்கமைய .............. ஆந் திகதியில் உள்ளவாறு சகல சம்பள ஏற்றங்களையும் (சேவை அல்லது திணைக்களப்

பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) நான் உழைத்துள்ளதுடன் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ளேன் என்பதுடன் எந்த வடிவிலான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பதையும் நான் பிரகடனம் செய்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல விதிகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் அமைய இம்மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகுதியுள்ளது என்றும் எனது அறிவுக்கு எட்டியவரை இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ................. ஆந் திகதிய ................ ஆம் இலக்கப் பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன். இப்பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் பிரமாணக் குறிப்புக்கு இணங்க நான் தகுதியற்ற ஒருவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்கு பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும், இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

......................,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :.................

6. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ................................................. (முழுப்பெயர்) என்பவர் எனக்கு நன்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் ................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும், இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.................,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

திகதி :.................
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர் :.................
பதவி :.................
முகவரி :.................
திகதி :.................
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

7. திணைக்களத் தலைவரின் சான்றுரை (தனிப்பட்ட கோவையினைச் சரிபார்த்து) :
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................... என்னும் பதவியொன்றில் சேவையாற்றுகிறார் என்றும், ........... என் முன்னிலையில் இவ்விண்ணப்ப படிவத்தில் கையொப்பமிட்டார் எனவும், குறிப்பிடப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதையும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

..................,
திணைக்களத் தலைவரின்/அதிகாரம்
அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :.................
பதவி :.................
திகதி :.................
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

02-333

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3 ஆம் சேவை வகுதியின் தரம் III ஆம தரத்திலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை –2019 (2023)

கவனிக்கவும். 2022.04.08 ஆந் திகதிய இல. 2275 இன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் அறிவுறுத்தலுக்கமைய விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3 இன் கீழ் குறித்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தலுக்காகத் தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஓவ்செட் லிதோ பதிப்பவர் மற்றும் இயந்திர இயக்குநர் | 12 |
| 02 | எழுத்து அச்சக இயந்திர இயக்குநர் | 02 |
| 03 | அச்சுப்பதிப்பு முன் திட்டமிடுபவர் | 02 |
| 04 | கணினி தட்டச்சு மற்றும் அச்சகக் கோலம் வரைபவர் | 02 |
| 05 | அச்சிடும் தொழில்நுட்பவியலாளர் | 02 |

1. **ஆட்சேர்ப்பு முறை** : அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அதன் போது பரீட்சை ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட (05 ஆவதில் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளியிடும் திட்டத்திற்கேற்றவாறு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

2. **தகைமைகள்**.-

I. **பொதுவான தகைமைகள்**

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
- சிறந்த நன் நடத்தையுடையவராகவும் சிறந்த உடல் நிலையைக் கொண்டிருக்கவும் வேண்டும்;
- ஏதாவது சமயத் தலைவராக இருக்க முடியாது;
- இரவு பகல் போன்ற இரு வேளைகளிலும் கடமையாற்றக்கூடியவராக இருப்பதுடன் ஆண் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்;
- அரசசேவை ஆணைக்குழுவினது கடமை விதிக்கோவை சட்டத்தில் 5 ஆவது அத்தியாயத்திற்கேற்ப அரச சேவைக்கு நியமிப்பதற்கு பொருத்தமில்லாதவராக இருத்தல் கூடாது;
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் எல்லாவற்றையும் பூரணப்படுத்தி இருக்க வேண்டும்;
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அதற்கேற்ப 2002.10.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும் 1985.10.25 ஆந் திகதி அல்லது அதன் பின்னரோ பிறந்த ஒருவர் மட்டுமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

II. **கல்வித் தகைமை**

அ. கல்விப் பொதுத் தராதர சான்றிதழ் பத்திரங்கள் (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, உட்பட பாடங்கள் நான்கு (4) திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் கணிதம் உள்ளிட்ட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஆ. கணினி தட்டச்சு மற்றும் அச்சுப் பதிப்பு கோலமிடுபவர் பதவிக்கு மட்டும் மேலே (அ) இல் உள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக க.பொ.த. (சா.தர) பரீட்சையிலே ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச்சித்தியைப் பெற்றிருத்தல் அவசியமாகும்.

III. **தொழிற் தகைமைகள்**

(அ) மேற்படி சகல பதவிகளுக்கும் உரிய புலங்களுக்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தொழில் தகுதி (NVQ) 4 மட்டத்தினது சான்றிதலோ அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அதற்கு மற்றும் சமமான உயர் புலத்திற்குரியவாறு பயின்று பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் ஒன்று உள்ளதா என்பது கவனத்தில் கொள்ளப்படும்.

**குறிப்பு** : அச்சிடும் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு அச்சிடும் தொழில்நுட்பவியலாளர் அல்லது இலற்றிக்கல் தொழில்நுட்பவியலாளர் துறைகள் பொருந்தும்.

IV. **சேவை அனுபவம்**.- புலன்களுக்கு இதற்குரிய பதவிக்கு 05 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : உரிய பதவியில் உரிய அனுபவத்திற்குத் தேவையான விண்ணப்பதாரிகள் இல்லாதுவிடத்து மிகுதி வெற்றிடம் தொடர்பாக சேவை அனுபவம் இல்லாமல் வேறு தகுதிகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கும் விண்ணப்பதாரிகள் ஒரு வருடப் பயிற்சிக் காலத்தின்கீழ் பதவிக்கு அமர்த்தப்படுவர்.

V. **உடற் தகைமை**.-எல்லா விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தப் பகுதியிலும் கடமையாற்றுவதற்குப் போதுமானளவு உடற்தகைமைகளையும் சிறந்த மனோநிலையையும் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

**3. கடமையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகளும் கடமை நிபந்தனைகளும்**

I. இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும். உங்களுக்கு ஓய்வூதிய சம்பளமுறைமை தொடர்பாக அரசினால் முன்வைக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் உடன்பட வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறைமைகளுக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் முறைகளுக்கு நீங்கள் அதற்காக பங்களிப்பு செய்ய வேண்டும்.

II. இந்தப் பதவி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட பதவியாகும்.

III. இந்தப் பதவியானது 03 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சக சேவை விதிக்கோவையின் 3 ஆவது உப ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு 1 ஆவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

IV. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சக சேவை விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணம், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள், அரசினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற வேறு சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இந்நியமனம் உட்பட்டது.

V. கடமையின் தேவைக்கேற்ப இரவு, பகல் போன்ற வேளைகளிலும் கடமையாற்ற வேண்டியதுடன் வழங்கப்படும் கடமைகளுக்கேற்ப விடுமுறை நாட்களிலும் விருப்புடன் தமது கடமைகளை வழங்கத் தயாராக இருக்க வேண்டும்.

4. **சம்பளத்திட்டம்.-** இப்பதவி ரூபா 29,840.00 - 10×300-11×350-10×560-10×660-ரூபா 48,890.00 (MT1-2016) மாதாந்தம் சம்பளத்திட்டத்திற்கு உட்பட்டது.

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளித்திட்டம் கவனத்தில் கொள்ளப்படும். இந்த நேர்முகப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடைபெறுவதுடன் விண்ணப்பித்த மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டது.

| | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | உச்சப் புள்ளி |
|---|---|---|
| 1 | கல்வித் தகைமை | 30 |
| 2 | தொழில் தகைமை | 30 |
| 3 | உரிய துறையில் அனுபவம் | 35 |
| 4 | நேர்முகப்பரீட்சையில் காட்டும் தேர்ச்சி | 05 |
| | **மொத்தப்புள்ளி** | 100 |

மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும். பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உச்சப்புள்ளிகளின் அளவு உள்ளடக்கப்பட்டதாக புள்ளி வழங்கப்படும். அந்தப் புள்ளிகளை வழங்குவதற்கான விபரமான புள்ளித்திட்டமொன்று பரீட்சை ஆணையாளரினால் கடைப்பிடிக்கப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் சித்தியடைவதற்காக குறைந்தபட்சம் 40% ஆன புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டியதுடன் உரிய பதவிகளின் தன்மைக்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பின்னர் வெற்றிடத்தின் எண்ணிக்கையின் மூன்று மடங்கினர் தேர்ச்சிகளை அளவிடும் தொழில் (செயன்முறை) சோதனைக்காக அனுப்பப்படுவர்.

தொழில் (செயன்முறை) சோதனையில் உயர்ந்த புள்ளிகளைப் பெறுபவர்களிடையே முன்னுரிமைக்கேற்ப காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

6. பரீட்சைக் கட்டணம் ரூபா 250.00 ஆகும் இந்தப் பணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத்தலைப்பு 20-03-02-13 இன் கீழே 2023.03.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக நாட்டின் எந்தப்பகுதியிலும் உள்ள அஞ்சல் அலுவலகத்திலோ அல்லது உப அஞ்சல் அலுவலகத்திலோ மட்டும் செலுத்த முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டினை விண்ணபத்திலே உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை எதிர் கால பயன்பாட்டிற்காக வைத்துக் கொள்க) ஒவ்வொரு பதவிகளுக்காகவும் வெவ்வேறான கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. **விண்ணப்பத்தை அனுப்புதல் :**

**குறிப்பு** :- இந்த வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பித்த பதவிக்கான தகுதிகளை நீங்கள் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

I. விண்ணப்பங்கள் யாவும் 2023.03.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிர்வாகக் கிளை, இலங்கைப் பரீட்சைத்திணைக்களம், த.பெ. இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

II. விண்ணப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரியொன்று இந்த அறிவுறுத்தலின் இறுதியிலே காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து முதற்பக்கத்தில் 01 தொடக்கம் 06 வரையிலான பந்தியினையும் எஞ்சிய பந்திகளை மற்றைய பக்கத்திலும்

அமையுமாறு தயாரித்துக் கொள்ளவேண்டும். விண்ணப்பத்தின் தலைப்பிலே குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பதாரிகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பதாரிகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுத வேண்டும்.

* உரிய மாதிரிக்கு அமையாதவையும் பூரணமற்றதான விண்ணப்பங்களும் எதுவித அறிவுறுத்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதனால் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன்னர் அது பரீட்சையின் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்ததிற்கேற்ப அமைந்துள்ளதா என்பதையும் எல்லா தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பம் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பதையும் விண்ணப்பதாரிகள் பரிசீலித்து உறுதி செய்து கொள்ள வேண்டும்.

III. விண்ணப்பத்தை அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையிலே “முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3 ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் 2019 (2023)” எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

IV. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த நிறுவனத் தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியின் ஒப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஒருவரும் அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பதாரி தமது ஒப்பத்தை அரச பாடசாலையின் அதிபர் ஒருவர், ஓய்வு பெற்ற அலுவலர் ஒருவர், கோட்டத்தின் கிராம அலுவலர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர், பிரபல்ய நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் அதிகாரம் மிக்க அலுவலர் ஒருவர், அரச மற்றும் மாகாண சேவையில் நிலையான பதவியிலுள்ள பதவிநிலை அலுவலர் ஒருவர், பௌத்த விகாராதிபதி மகாநாயக்கர்கள் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள் அல்லது மதத் தலைவராகக் கருதப்படும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

V. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கேற்ப அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். விண்ணப்பம் தொலைந்துபோதல் அல்லது தாமதமாக அனுப்பப்பட்டமை என எவ்வித முறைப்பாடு களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டது.

**8. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுதல்**

I. வர்த்தமானி அறிவுறுத்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித் துள்ளனர் என்ற கருதுகோளுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னராக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

II. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் இந்தப்பதவிக்கான தகைமைகளைக் கொண்டிருப்பதாக கருதப்படமாட்டாது.

III. விண்ணப்பதாரிகளுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டவுடனே உடனடியாக அது தொடர்பாக செய்தித்தாளிலே விளம்பரம் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னர் அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதுவிடின் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கேற்ப அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்திற்கு (நிருவாகக் கிளை பரீட்சைத் திணைக்களம்) அறிவிக்க வேண்டும். அவ்வாறு விசாரணை செய்யும் விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம்,

விலாசம் என்பவற்றை சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவர் எனின் அந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக அழைப்புக் கடிதத்தின் பிரதியை விரைவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்தை அறிவித்தலில் காட்டப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்து கொள்ளுதல் மிகச்சிறந்தது. அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் விசாரணை செய்கின்ற எந்தத் தகவல்களையும் உறுதி செய்து கொள்வதற்காக தங்களிடம் உள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச் சீட்டின் பிரதி, பதிவுத் தபாலின் பற்றுச் சீட்டின் பிரதி என்பவற்றை தயாராக வைத்திருத்தல் வேண்டும்.

IV. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டவர்களாவர். அந்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் தண்டனைக்கு உட்படுத்த வேண்டி ஏற்படும்.

9. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம் :** விண்ணப்பதாரிகளினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களுள் ஒன்றை நேர்முகப்பரீட்சைக் குழுவிற்கு முன்வைக்க வேண்டும்.

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்யும் முகமாக முகம் மற்றும் தமது இரு காதுகளை மறைக்காது வருதல் வேண்டும். அவ்வாறு ஆள் அடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் பரீட்சாத்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உள்வாங்கப்படமாட்டர்கள். மேலும் நேர்முகப்பரீட்சை முடிந்து வெளியேறும் வரை பரீட்சை அலுவலகர்களுக்கு விண்ணப்பதாரிகளை இனங்காணக் கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளும் தெரியக் கூடியதாக இருக்க வேண்டும்.

10. **தவறான தகவல்களை வழங்குதல்**

I. உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்திலே குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதாவது தகவல் ஒன்று பொய்யாகவோ அல்லது தவறுதலாகவோ ஆட்சேர்ப்பதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் உங்களது விண்ணப்பதார தன்மை இரத்துச் செய்யப்படும். அதனால் பொய்யான அல்லது தவறான தகவல் ஒன்று ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அரச சட்டதிட்டங்களுக்கேற்ப செயற்பட்டு அரச சேவையில் இருந்து விலக்குவதற்கும் நேரிடும்.

11. வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுவது தொடர்பான இறுதித் தீர்மானம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தல்களில் மொழி தொடர்பாக ஏதாவது வித்தியாசம் காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவுறுத்தலுக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எச். ஜே. எம். சீ. அமித் ஜயசுந்தர,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்லை,
2023, பெப்புருவரி 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3 ஆம் சேவை வகுதியின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை -2019 (2023)

**Recruitment to Grade III Posts of Management Assistants' Technological Segment 3 Service Category –2019 (2023)**

(இலக்கம் அல்லது குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களிலே தரப்பட்ட கூட்டினுள் தெளிவாகவும் சரியாகவும் இலக்கம் /குறியீட்டைக் குறிப்பிடுக.)

| | |
|---|---|
| நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் மொழி | |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

சிங்களம் - 2 /தமிழ் - 3 /ஆங்கிலம் - 4

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் பதவி | |

(விண்ணப்பிக்கும் பதவிக்குரிய இலக்கத்தை எழுதவும்)

| | பதவி | இலக்கம் |
|---|---|---|
| 1 | லிதோ ஓவ்செட் பதிப்பவர் மற்றும் இயந்திர இயக்குநர் | 1 |
| 2 | எழுத்து அச்சக இயந்திர இயக்குநர் | 2 |
| 3 | முன் அச்சிடல் திட்டமிடலாளர் | 3 |
| 4 | கணினி தட்டச்சு மற்றும் அச்சகக் கோலம் வரைபவர் | 4 |
| 5 | அச்சக தொழிநுட்பவியலாளர் | 5 |

1. 1.1 முழுப் பெயர்:.................................................................................
(ஆங்கிலத்தில்)

1.2 முதல் எழுத்து இறுதியில் வருமாறு முதல் எழுத்துக்களுடன் பெயர் :..........................................................................
(ஆங்கிலத்தில்)

1.3 முழுப் பெயர்: ..........................................................................................................................
(தமிழில்)

2. 2.1 நிரந்தர முகவரி: ..........................................................................................................................
(ஆங்கிலத்தில்)

2.2 நிரந்தர முகவரி:..........................................................................................................................
(தமிழில்)

2.3 அழைப்புக் கடிதம் அனுப்பப்படவேண்டிய முகவரி:..........................................................................
(ஆங்கிலத்தில்)

3. பால் : ☐ ஆண் - 0 பெண் - 1

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

6. 6.1 பிறந்த திகதி:

வருடம்: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

6.2 விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதியன்று வயது : (2023.03.24)

வருடங்கள்: [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள்: [ | ]

7. விவாகமானவரா/விவாகமாகாதவரா: [ ] விவாகமானவர் - 1 விவாகமாகாதவர் - 2

8. கல்வித் தகைமை

8.1 க.பொ.த. (சாதாரணதர) பரீட்சை
பரீட்சைக்குத் தோற்றிய வருடமும் மாதமும்:..............................................
பரீட்சை சுட்டெண்:..........................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

9. தொழில் தகைமை

| பாடநெறி | பயின்ற வருடம் | தொழில்நுட்ப நிறுவகம் | NVQ மட்டம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

9.1 உங்களால் முன்வைக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் எந்த NVQ மட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்பது தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதமொன்று கட்டமைக்கப்பட்ட நேர்முகக்குழுவிடம் ஒப்படைக்கப்படவேண்டியது கட்டாயமாகும்.

10. உரிய துறையில் பெற்றுள்ள அனுபவம்:.............................................................

11. வேறு கல்வி மற்றும் தொழில் தகைமை:.........................................................

12. நீங்கள் ஏதாவது குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தினால் தவறு இழைத்தவராக கருதப்பட்டுள்ளீரா? ஆம் எனின் அது தொடர்பாக குறிப்பிடுக :..................................................

13. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரம்
13.1 பரீட்சைக்கட்டணம் செலுத்திய அலுவலகம் :..................................................
13.2 பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் : ..................................................
13.3 செலுத்திய பணம் :..................................................

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

14.1 இந்த விண்ணப்பத்திலே என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதும் என கௌரவமாக உறுதி செய்கிறேன். இங்கு ஏதாவது பகுதியொன்று பூரணப்படுத்தப்படாமலோ அல்லது தவறுதலாக பூரணப்படுத்தப்பட்டிருப்பின் ஏற்படும் பாதிப்பை ஏற்றுக் கொள்ள நான் சம்மதிக்கின்றேன். மேலும் இங்கு எல்லாப்பகுதிகளும் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகிறேன்.

*14.2* என்னால் வழங்கப்பட்ட ஏதாவது தகவலொன்று தவறானது என உறுதி செய்யப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவர் எனவும் நியமனம் பெற்ற பின்னர் சேவையில் இருந்து நீக்குவதற்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் என்பதை அறிவேன்.

*14.3* மேலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

*14.4* இங்கு குறிப்பிடப்படும் எந்தத் தகவலும் பின்னர் மாற்றப்பட முடியாது.

.............................
விண்ணப்பதாரியின் கையெப்பம்.

திகதி: .............................

*15.* விண்ணப்பதாரியின் கையெப்பத்தை உறுதிப்படுத்தல்

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................................... அவர்களை நான் நன்கறிவேன எனவும், அவர் இன்று என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.....................................................
(உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்).

பெயர் : ............................................................
பதவி: ..........................................................
முகவரி: .......................................................
திகதி : ............................................................

*16.* தற்போது அரசாங்க சேவையில் இருக்கின்ற விண்ணப்பதாரிகள் மட்டும் தமது திணைக்களத் தலைவரது பின்வரும் சான்றிதழுடன் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .................................................. என்பவர் இந்த நிறுவனத்தில் கடமையாற்றுகிறார் எனவும் அவர்/அவள் வழங்கியுள்ள தகவல்கள் சரியானவை எனவும் இப்பதவிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டால் இந்த நிறுவனத்திலிருந்து அவரை விடுவிக்கமுடியும் எனவும் சிபாரிசு செய்கிறேன்.

...................................................
(திணைக்கள தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்).

பெயர்: ............................................................
பதவி: ..........................................................
முகவரி: ..........................................................
திகதி : ............................................................

*02-381*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.